பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
( BECON )
A/L 92
வர்த்தகமும் நிதியும்
வினா - விடை வகுப்பு
ஆரம்பம் : 18 — 4 — 92
சனி 12-00 மணி

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
( BECON )
A/L 94
வகுப்புகள்
ஆரம்பம் : 18 — 4 — 92
சனி காலை 8-00 மணி

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (17-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 141

# கொழும்பில் மீண்டும் குண்டு வெடிக்கும் என்று எச்சரிக்கை!

## 2 வாகனங்கள் நகருக்குள்ளே நிற்பதாக கூட்டுபடை தகவல்

கொழும்பு, ஏப்ரல் 17

கொழும்புப் பகுதியில் மீண்டும் குண்டு வெடிப்புகள் நடக்கும் என்று இப்பகுதி மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

குண்டுகள் பொருத்தப்பட்ட ஒரு டெலிக்கா வானும், ஒரு எல்வ் வானும் கொழும்பு நகருக்குள் நுழைந்துவிட்டதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

அதனைத் தொடர்ந்தே, நகரின் எந்தப் பகுதியிலும் எந்நேரமும் குண்டு வெடிக்கலாம் என்ற அச்சம் பாதுகாப்புப் படை வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி அம்பாறையிலும், மஹரகமவிலும் கார்க் குண்டுகள் வெடித்தது போல மேலும் பல குண்டு வெடிப்புகளை நடத்தத் திட்டமிடப்பட்டு இருப்பதாகவும், கூட்டுப் படைத் தலைமையகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

அம்பாறை, மஹரகம குண்டு வெடிப்புகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் மூலமே, குண்டு பொருத்தப்பட்ட வாகனங்கள் கொழும்பு நகருக்குள் நுழைந்திருப்பது குறித்துத் தகவல் பெறப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

டெலிக்கா, எல்வ் வாகனங்களின் பெற்றோல் தாங்கிகளில் குண்டுகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்தனராம்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 2 மாதகால சண்டையில் 213 படையினர் பலி!

### 175 நவீன ஆயுதங்கள் மீட்பு!!

யாழ்ப்பாணம், ஏப். 17

ஏப்பிரல் 15-ஆம் திகதியுடன் முடிவடைந்த 60 நாட்களில் விடுதலைப் புலிகளுடனான மோதல் சம்பவங்களில் மொத்தம் 213 ஸ்ரீலங்காப் படையினர் பலியாகினர். அவர்களிடம் இருந்து 175 நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். இக் காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் தரப்பில் நூறு பேர் வீரமரணமடைந்துள்ளனர்.

இந்த இரு மாதகாலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் ஆறு பாரிய இராணுவ நடவடிக்கைகளை தமிழீழத்தில் மேற்கொண்டனர்.

சயேபகர, கருப்பு நரி,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப சோவியத் யூனியனின் மறைவுடன் நஜிபுல்லா நடுத் தெருவில் என்று சொல்லுங்கோ......!

## ராஜீவ் கொலை:

## புலிகளுக்கு எதிராக ஆவணச்சான்று உண்டாம்

புதுடில்லி, ஏப். 17

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதற்கான ஆவணசான்றுகளை சிறப்புப் புலனாய்வுக்குழு சேகரித்திருப்பதாக புதுடில்லியில் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் ஆணைப்படியே ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார் என்பதற்கான அடையாளத்தைக் காட்டுவதாக இந்த ஆவணச் சான்றுகள் இருப்பதாக புலனாய்வுத் துறை வட்டாரங்கள் மேலும் கூறின.

இவ் வழக்கில் குற்றப் பத்திரிகை அநேகமாக தயாராகி விட்டது என்றும்—

அடுத்த ஓரிரு நாட்களுக்குள் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி இது குறித்து புதுடில்லியில் உள்ள மூத்த அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## படையினர் சூடு!

யாழ்ப்பாணம், ஏப். 17

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் சரமாரியான துப்பாக்கித் தாக்குதலை நடத்தினர்.

இதே சமயம் —

மண்டைதீவுப் பகுதியில் இருந்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

[இ-5-51]

## நல்லூரில் தமிழிசை விழா

தமிழீழ இசைக் கலைஞர்களை ஒன்றிணைத்து மாபெரும் 'தமிழிசை விழா' ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

மே மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை மாலை 5 00 மணி முதல் இரவு 10 30 மணி வரை நல்லூர் ஆலய வீதியில் தமிழிசை விழா நடைபெறும்.

இதற்காக ஆலய வடக்கு வீதியில் அரங்கு ஒன்று அமைக்கப்படும்.

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் கலைஞர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் இந்த விழாவில் பங்கு பற்ற உள்ளனர்.

நாதசுரக்கச்சேரி, இசைக் கச்சேரி, வயலின் கச்சேரி உட்பட பல்வேறு இசைக்கச்சேரிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. [இ]

## நோயாளி விமானம் மூலம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம் ஏப். 17

யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவசர நோயாளி ஒருவர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் நேற்று விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இணுவிலைச் சேர்ந்த தர்மகுலராணி [வயது 38] என்பவரே இந்த நோயாளி ஆவார்.

இந்த நோயாளியுடன் வைத்திய அதிகாரி ஒருவரும் உதவியாகச் சென்றுள்ளார்.

[இ-3-15]

## விமான விபத்து 50 பேர் பலி!

நைரோபி, ஏப். 17

கென்யாவின் தலைநகர் நைரோபியில் விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்று நேற்று வீழ்ந்து நொருங்கியதில் 50 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

விமானம் இருகட்டடங்களுக்கு இடையே வீழ்ந்ததாகவும் நிலத்தில் இருந்த பலர் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-10]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17

கடந்த மாதம் பொலன்னறுவ குவாட்டஸ் முகாமில் இருந்து வெளியேறி ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது காயமடைந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்ரினன்ட் கர்ணன் [வடிவேல் ரவிச்சந்திரன் — பெரியகல்லாறு] வீரச்சாவைத் தழுவிக் கொண்டார் என அறிவிக்கப்படுகிறது. [இ-5]

## குமணவில் மட்டும் பயணம் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 17

நோயாளிகள், மற்றும் பயணிகளை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் ஏற்றிவர 'குமண' கப்பல் மட்டுமே இனி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

குமண கப்பலில் 96 பேர் பயணம் செய்ய பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது என்று கூறப்படுகின்றது

மற்றும் அப்பல்களான 'லில்லி' 'குமாரி' கப்பல்களில் பயணிகளோ அல்லது நோயாளிகளோ செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## தூத்துக்குடி விமான நிலையம்

சென்னை, ஏப். 17

புதிதாகக் கட்டப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலையம் இம்மாதம் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்க்குழுக்களுடன் இணைந்து படையினர் பெரும் தேடுதல்

### கிழக்கில் 2 வாரங்களில் 15 தமிழர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 17

கிழக்கின் பல பகுதிகளிலும் தேசவிரோத தமிழ் குழுக்களுடன் இணைந்து படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த நான்கு நாட்களாக படையினரின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர் பகுதியில் அகதி முகாம்களும் படையினரின் தேடுதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

மட்டக்களப்பிலும் படையினர் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னரை விட அதிக எண்ணிக்கையான படையினர் முகாம்களில் இருந்து வெளியேறி சுற்றிவளைப்பில் ஈடுபடுகின்றனர்.

இம்மாதத்தின் முதல் இரு வாரங்களில் மட்டும் சுமார் 15 தமிழர்கள் கிழக்கில் படையினராலும் சமூகவிரோதக் கும்பல்களாலும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

[இ-5]

## நஜிபுல்லா பதவி விலகினார்

காபூல், ஏப். 17

ஆப்கனிஸ்தான் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா பதவி விலகிவிட்டார்.

நாட்டைவிட்டு வெளியேற அவர் எடுத்த முயற்சி தோல்வி அடையவே அவர் காபூலில் உள்ள ஐ. நா. தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான அரசுப் படையில் இருந்து வெளியேறிய அதிருப்திப் படைகளின் கட்டுப்பாட்டில் காபூல் விமான நிலையம் தற்போது இருப்பதாக சொல்லப்படுகின்றது.

பதவி விலகிய நஜிபுல்லா பிரதம தளபதிகளும் ஒரு தீவிரவாதத் தலைவரும் அடங்கிய கூட்டுக்குழு ஒன்றிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில்— தேசிய பந்தோபஸ்து அமைச்சர் தற்கொலை செய்துகொண்டார் என்று மற்றும் ஒரு செய்தி கூறுகிறது. [இ-எ-10]

## ராவுக்கு அடுத்த இடம் அர்ஜுன்சிங்கிற்கு

### சரத்பவார் பின்தள்ளப்பட்டார்

திருப்பதி, ஏப். 17

இந்திரா காங்கிரஸ் கட்சியின் கொள்கை வகுக்கும் உயர் நிலைக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பத்து உறுப்பினர்களில் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று முதலிடத்துக்கு வந்தார்.

நரசிம்மராவ் அரசில் பிரதமருக்கு அடுத்த இடத்தை வகிக்கும் செல்வாக்குப் பெற்றவராக திரு. அர்ஜுன்சிங் விளங்குகின்றார் என்று பி. பி. சி. அறிவித்தது.

நரசிம்மராவுடன் பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாருக்கு அரசில் இரண்டாவது இடம் கிடைப்பது தவறிவிட்டது என்றும் பி. பி. சி. தெரிவித்தது.

உயர் நிலைக் குழுவுக்கு பத்து உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த புதன்கிழமை இரவு திருப்பதியில் இந்திரா காங்கிரஸ் தேசிய மாநாட்டில் இடம்பெற்றது.

பத்து உறுப்பினர்களும் வரிசைக்கிரமத்தின்படி வருமாறு; அர்ஜுன்சிங், ஜிதேந்திரபிரசாத், ஏ.கே. அந்தோனி, சரத்பவார், ஆர் கே. தவான், குலாம் நபி ஆஸாத், பல்ராம் ஜாக்கர், ஆமத் பட்டேல், ராஜேஷ் பைலட், விஜயபாஸ்கர்ரெட்டி.

[இ-எ]

## பட்டர், பால்மா; கிளிநொச்சியில் உற்பத்தி!

### இந்தியாவிலிருந்து இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

உள்ளூரிலேயே ''பட்டர்'' பால்மா ஆகியன உற்பத்தி செய்யப்படவுள்ளன. இதற்கென இந்தியாவில் இருந்து சிறுரக இயந்திரங்களைத் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் பெருமளவில் கிடைக்கும் பசுப்பாலைக் கொண்டு உள்ளூரிலேயே பட்டரையும் பால்மாவையும் தயாரிக்க முடியுமா என்பது குறித்து கிளிநொச்சியில் உள்ள யாழ். பல்கலைக் கழக விவசாயபீடத்தினர் ஆய்வு மேற்கொண்டிருந்தனர்.

அந்த ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்தப் பாற்பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு தேவையான சில சிறியரக இயந்திரங்களை இந்தியாவில் இருந்து தருவிக்க ஏற்பாடாகியுள்ளது.

வர்த்தக ரீதியான உற்பத்தியைப் பெருக்கும் போது பாரிய இயந்திரங்கள் தேவைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

# பௌத்த பிக்குகள் தூதுக்குழு நாளை வருமா, தாமதமாகுமா?

எட்டுப் பேரைக் கொண்ட பௌத்த குருமார் தூதுக்குழு யாழ்ப்பாணம் வருவது நேற்று மாலை வரை உறுதி செய்யப் படவில்லை,

பௌத்த குருமார் தூதுக் குழு நாளை சனிக்கிழமை இங்கு வரும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. தூதுக் குழுவினரை விமான மூலம் கூட்டி வருவதற்கு செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு ஏற்பாடுளைச் செய்து வருவதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவர்கள் இங்கு வருவது குறித்து இங்குள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு, கொழும்பில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் இருந்து நேற்று மாலை வரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இதேவேளை ,யாழ். வரவிருக்கும் பௌத்த குருமார் தூதுக்குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருப்பதாக இலங்கை வனொலியில் அறிவிக்கப்பட்டது

ஆகையால் தூதுக்குழுவினர் திட்டமிட்டபடி வருவார்களா அல்லது அவர்களின் விஜயம் தாமதமாகுமா என்பதை நிச்சயப்படுத்தி எதுவும் கூறமுடியவில்லை.

பௌத்த தூதுக் குழுவினர் செ. ச. சர்வதேசக் குழுவின் பொறுப்பில் யாழ்ப்பாணம் வருவதற்கு தாம் அனுமதி வழங்குவதில் எவ்வித தடையும் இருக்காது என்றும்—

பௌத்த குருமாரின் யாழ். விஜயத்துக்கான விமான ஒழுங்குகளைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் — கூட்டுப்படை அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்திருந்தார்கள்.

# யுத்த நிறுத்தம் கொண்டுவர பௌத்தபிக்குகள் முயல்வராம்

கொழும்பு, ஏப். 17

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் முக்கிய கவனஞ் செலுத்தப்படவிருப்பதாக யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் பௌத்த மதகுருமார் தெரிவித்தனர்

யுத்தநிறுத்தத்துக்காக ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென விடுதலைப் புலிகளைத் தாம் கேட்கவிருப்பதாகவும்—

அதேவேளை பாதுகாப்புப் படையினரும் யுத்த நிறுத்தத்துக்காக அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் என்று அரசைக் கோரவிருப்பதாகவும்— அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு பேச்சுகளில் ஈடுபட முடியாது என்பதை யாழ்ப்பாண விஜயத்தின்போது பௌத்த குருமார்கள் வலியுறுத்த இருப்பதாக கொழும்புத் தமிழ் நாளேடு ஒன்று வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் உட்பட விடுதலைப் புலிகள் தங்கள் முகாம்களில் தடுத்து வைத்திருப்போரை விடுதலை செய்யுமாறு கேட்க இருப்பதாகவும் பௌத்த பிக்குகள் குழுவினர் தெரிவித்துள்ளனராம். [அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த பாத்திரங்களும், பலவித பொருள்களும் விற்பனைக்குண்டு. மாலை 5-30 க்கும் 7-30 க்கும் இடையில் தொடர்பு கொள்க. க. அன்பழகன் (ஷி அன்புஜி) காமாட்சி அம்பாள் ஆலய குளக்கரை, நாச்சிமார் கோவிலடி. [20487]

### இலவச திருமண சேவை

உங்கள் விவாக பொருத்தங்களுக்கு பகல் 12-30 தொடக்கம் 4-00 மணி தவிர்ந்த நேரங்களில் எல்லா நாட்களிலும் எங்களைச் சந்திக்கலாம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [20483]

31 வயது, சதயம் 2, A/L லண்டன் Steno சித்தி பெற்ற அழகிய மணப் பெண்ணுக்கு நிர்வாகத்துறைத் தரத்தில் மணமகன் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4658]

### கணிதம் தனிப்பட்ட வகுப்புகள்

கணிதம் கற்பித்தலில், நீண்ட கால அனுபவம் வாய்ந்த O/L 91 கணிதத்தில் பல திறமைச் சித்திகளுக்கு வழிவகுத்த ஆசிரியரால் புதிய பிரிவுகள் நடத்தப்பட உள்ளன. ஆரம்ப அறிவே இல்லாதோருக்கு விசேடமாகக் கவனிப்பு, திறமைச் சித்திக்கு உத்தரவாதம் மற்றும் வகுப்புகளும் நடைபெறுகின்றன. க. பரராசசேகரன், 8, பிளச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. [20473]

### THE SPORTS STAR

பங்குனி மாத 21 ஆம், 28 ஆம் திகதிகளுக்குரிய World Cup Sports Star சஞ்சிகை விற்பனையாகின்றது. தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-1884]

### புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை 18-4-92 சனியும், ஆண்டு 5 (1992) 19-4-92 ஞாயிறும், மு. ப. 7-00 மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20500]

### தவறிவிட்டது

இயக்கச்சிக்கும், பளைக்கும் இடையில் மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரமும், அதற்குரிய வேறு சில பத்திரங்களும் அடங்கிய பார்சல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P. மரியதாசன், கூழாவடி - செட்டித் தோட்டம், ஆனைக்கோட்டையில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [20495]

### திருமண சேவை

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் சகல துறைகளிலுமுள்ள ஆண்கள், பெண்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. விருப்பத்திற்கு ஏற்ப பொருத்தம் பார்த்து நிறைவேற்றி வைக்கப்படும். செ. விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். [20601]

## விஷக் காய்ச்சலுக்கு குழந்தை பலி

யாழ்ப்பாணம், ஏப். 17

விஷக்காய்ச்சலில் பாதிக்கப்பட்ட (Septicemia) 1 வயதுப் பெண் குழந்தை ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு சிகிச்சை பலனளிக்காததால் மரணமானது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி தர்சினி (வயது 1) என்ற குழந்தையே மரணமான குழந்தையாகும். [த-15]

## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம்: மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

காலம்: 19—04—1992 ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 முதல் மாலை 5-30 மணி வரை

சகல உறுப்பினர்களும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பழைய மாணவர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தலைவர். இணைச்செயலாளர்கள்.

[20443]

## புதிய உயர் கல்லூரி
## (New College of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### A/L 94

ஆரம்பம்: 18 - 04 - 1992

| | |
|---|---|
| பொருளியல் — | லோகசிங்கம் |
| கணக்கியல் — | யோகராஜா |
| வர்த்தகம் — | தேவா - பசில் |
| அளவையியல் — | மகேந்திரன் |
| புவியியல் — | குணராஜா |
| தமிழ் — | மீரா |
| அரசியல் — | ஜியூபேட் |
| வரலாறு — | நாகராணி |
| இந்து சமயம் — | தயாளன் |
| இந்து நாகரிகம் — | அருள் நங்கை |
| கிறிஸ்தவம் — | அருள் சகோதரர்கள் |

பிரிவு - I மட்டுமே. ஆதலால் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகி:
S. அருள் நங்கை.

[சி-1885]

## New Master Institute

B. M. C. Lane,
Jaffna.

### A/L 94

பிரிவு-I

(விஞ்ஞான-கணித பாடங்கள்)

ஆரம்பம்;
18-04 1992
சனிக்கிழமை
காலை 8-00 மணி

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

[சி-1886]

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

### A/L 94

| | |
|---|---|
| பொருளியல் — | திரு. வரதராஜன் |
| அளவையியல் — | திரு. S S. மனோகரன் |
| வர்த்தகவியல் — | திரு. வரதன் |
| கணக்கியல் — | திரு. சௌந்தி |
| இந்து நாகரிகம் — | திரு. திருநாவுக்கரசு |
| தமிழ் — | திரு. புலவர் சிவா |
| புவியியல் — | தர்மராஜா |

ஆரம்பம்: 18 04 1992
சனி — 11 மணி

குறிப்பு: குறிப்பிட்ட மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

[சி-1918]

## அன்னை பூபதியின்
### நினைவு நாளும் அடையாள உண்ணாவிரதமும்

காலம்: 17-04-1992 (இன்று)

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி

அடையாள உண்ணா விரதம் அனுஷ்டிக்கும் காலம் முற்பகல் 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை

### நிகழ்ச்சிகள்

ஆரம்பம்:
பிற்பகல் 3-00 மணி

தலைமையுரை:

வரவேற்புரை:

சிறப்புச் சொற்பொழிவு:
திரு. இளம்பரிதி-
யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
திரு. பரா-
பொறுப்பாளர், தமிழீழ மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு.
மற்றும் த. ஈ. வி. பு. மக்கள் முன்னணி உறுப்பினர்கள்.

சிறுவர் பேச்சுக்கள் — கவிதைகள்

வில்லிசை:
கலாவிநோதன் சின்னமணி இசைக் குழுவினர்

நாடகம்:

நாட்டிய நாடகம்:

மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நன்றியுரை:

தமிழ் மக்கள் அனைவரையும் அன்புடன் வருக! வருக!! என வரவேற்கிறோம்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
வலிகாமம்.

[சி-1920]

## BRILLIANT
## கல்வி நிலையம்

சாவகச்சேரி.

| A/L 94 | O/L 92 |
|---|---|
| கலை, வர்த்தக வகுப்புக்கள் | DAY CLASS |
| ஆரம்பம்: 19 - 04 - 1992 (ஞாயிறு) காலை 9 மணி | ஆரம்பம்: 21 - 04 - 1992 (செவ்வாய்) காலை 9 மணி |

குறிப்பு:- முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.

[20491]

## 94 A/L

விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம்:
18-04-1992
சனி 7-30 a.m.

விலங்கியல் —
திரு. ஈஸ்வரதாசன்
7-30 a.m.

பௌதிகவியல் —
திரு. ரவீந்திரநாதன்
8-30 a m

இரசாயனவியல் —
திரு. செல்வா
1-30 p m

தாவரவியல் —
திரு. பாலா
9-30 a.m.

தூய/பிரயோக கணிதம் —
திரு குணசிங்கம்

## Personal New Science Centre,

Elilakam Front Road,
Jaffna.

[சி-1914]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலா;
01—02—1941

விண்ணுலா;
17—04—1990



### அ. ஆரோக்கியநாதர்

பாசத்தின் ஒளிவிளக்கே! நீர் மறைந்த ஈராண்டில் நிகழ்ந்ததெல்லாம் சோகங்கள், அடுத்தடுத்துப் பிரிவுகள் அடுக்கடுக்காய் வந்ததனால் இதயமே ஆறவில்லை. ஏக்கமும் தீரவில்லை.

உமது பிரிவால் துயருறும்;
மனைவி மக்கள், சகோதங்ர்கள்,
மச்சான்மார், மருமக்கள்.

52, செபஸ்ரியன் றோட்,
யாழ்ப்பாணம். [4660]

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
22 — 04 — 1924

விண்ணில்:
27 — 04 — 1991



வேலணை கிழக்கைச் சேர்ந்த
அமரர்

### வைத்தியநாதர் செல்லத்துரை

திதி: 17-4-1992

பாசத்தின் உறைவிடமே! பண்பு நிறை பெருநவே! மாசற்ற மனமுள்ளோய் எங்கள் ஐயாவே! அன்புக்கு அணிகலனே! ஆருயிரின் இருப்பிடமே! ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு ஒழியாது. பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பாசம் மறவாது. தூயவனே எங்களை சிறப்புடன் வழிநடத்தி, சீருடன் பாதுகாத்தாய் தந்தையே! இறப்பிலும் இறைவனுடன் நீங்கள் இணைந்திட வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்,
உற்றார், உறவினர்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [20432]

## 'A' Level Centre

உயர்தராதரக் கல்வி நிலையம்,
பருத்தித்துறை வீதி,
1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

94 ஆம் ஆண்டுக்கான
### விஞ்ஞான
வகுப்புகள்

ஆரம்பம்:
18-04-1992
(Sat.)

ஆசிரியர்:

தாவரவியல் —
Mr. சிவவீரசிங்கம் B. Sc.

விலங்கியல் —
Mr. தம்பிராஜா B. Sc.

தூய கணிதம்
பிரயோக கணிதம் —
Mr. கணேசன் B. Sc.

பௌதிகவியல் —
Mr. ஜெயசீலன் B. Sc.

இரசாயனவியல் —
Mr. நாகரட்ணம் B. Sc.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-1912]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிடை வரவு:
06 — 08 — 1954

விண்ணிடை விரைவு:
29 — 04 — 1991



### அமரர் ஐயாத்துரை இராசநாயகம்

திதி: 17-04 1992

உம் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும், எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! காலன் உம்மைப் பாதி வயதில் பறித்தாலும், நீர் விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒருபோதும் நீங்காது.

உமது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி-
பிரிவினால் வாடி நிற்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

[illegible]
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். [20488]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### A/L கலை, வர்த்தகம்

94 புதிய பிரிவு - I [காலை 8-00 மணி]

93 பிரிவு - 3 [காலை 8-00 மணி]

ஆரம்பம்: 18-04-1992

| | |
|---|---|
| பொருளியல் — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் — | திரு. தேவா |
| கணக்கியல் — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் — | திரு. குழந்தைவேல் |
| இந்து நாகரிகம், இந்து சமயம் — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் — | திரு. குணராஜா |
| அரசியல் — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு — | திரு. ஸ்ரீதரன் |

முக்கிய குறிப்பு:

1. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட தொகை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
2. A/L 94 ஆண்டுக்கான O/L கணிதம் சித்தி பெறாத மாணவர்களுக்கு விசேட (கணிதம்) வகுப்புக்கள் சனி, ஞாயிறு காலை 7-00 — 9-00 வரை நடைபெறும்.

[சி-1860]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### வைக்கோலை எரியாதீர்!

வன்னிப் பகுதி விவசாயிகள் பெரும்போக நெல் அறுவடையின் போது பெற்ற வைக்கோலைப் பாதுகாத்துச் சேமித்து வைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இப்போது கடும் வரட்சி நிலவுகிறது. சென்ற ஆண்டிலும் போதியளவு மாரி மழை பெய்யவில்லை. அதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய வன்னிப் பிரதேசங்களில் விவசாயத்தின் ஊன்று கோல்களாக — ஊற்றுக் கண்களாக—விளங்கும் குளங்களில் போதிய அளவு தண்ணீர் இல்லை.

இதன் காரணமாக இம்முறை வன்னிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் சாத்தியம் இல்லை என்று தென்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் வன்னிப் பிரதேசத்தில், ஆவணி மாதத்தின் பின்னர் தொடங்கும் மழை காலத்தில் வன்னிச் சிறுபோக வைக்கோலே மாடுகளுக்குப் பிரதான தீவனமாக அமைவதுண்டு.

சிறுபோக வைக்கோல் கிடைக்காமற் போகின் வடக்குப் பிரதேசம் முழுவதிலும் பிரதான கால்நடைத் தீனுக்குப் பெரும் தட்டுப்பாடு, என்றுமில்லாதவாறு ஏற்படும் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

பிரதான கால்நடை உணவான வைக்கோல் தவிர்த்து ஏனைய உப தீவனங்கள் கிடைக்காததால் ஏற்கனவே குடாநாட்டில கால்நடை வளர்ப்போர் எண்ணிக்கை குறைந்து விட்டது. கால்நடைகள் இறைச்சிக்காக விற்கப்பட்டு விட்டன. அதனால் பால் விலை உச்சத்துக்கு உயர்ந்துள்ளது.

குழந்தைகள் சிறுவர்களுக்குக் கூட பால் வாங்கிக் கொடுப்பதை பல மத்திய தர குடும்பங்கள் கைவிட்டு விட்டன. அதன் காரணமாக எதிர்காலத் தமிழ்ப் பிரஜைகள் பலரையும் போசாக்கின்மை வெகு இலகுவாக, ஆனால் வேகமாகப் பிடித்து வருகிறது!

இத்தகைய ஒரு இக்கட்டான, கஷ்டமான சூழ்நிலையில் வன்னியில் சிறுபோக நெற்செய்கை தவறி வைக்கோல் கிடைக்காமற் போனால் கால்நடை வளர்ப்பு மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுவிடும்.

இந்நிலை வராமல் தடுப்பதற்கு வன்னியில் பெரும்போகத்தில் கிடைத்த வைக்கோலில் ஒரு கீலம் தானும் வீண் போகாமல் தவிர்க்கப் படவேண்டும்.

வன்னிப் பிரதேசங்களில் யாழ். மாவட்டத்தைவிட மிக அதிகமான நிலப்பரப்பில் நெற்சாகுபடி செய்யப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்: பெரும்போகத்தில் அதிக நெல் விளைவதும் அப்பகுதிகளிலேயே. அதன் காரணமாக அங்கு வைக்கோல் விலை போவதில்லை. குடாநாட்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவு.

அதனால் கிளிநொச்சி உட்பட வன்னிப் பிரதேசம் வாழ் விவசாயிகள் தமது வயல்களில் கிடைத்த வைக்கோலை எரித்து விடுவது வழக்கம்! அதனைச் சேமித்து வைத்துப் பாதுகாப்பதில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை.

இம்முறை அவர்கள் அப்படிச் செய்தலாகாது. சேமித்துப் பாதுகாக்கும் சிரமங்களையும், நேரம் வீணாகுதலையும் பொருட்படுத்தாது வைக்கோலை எரிக்காமல் வைத்திருக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும். சேமித்து வைக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் இம்முறை அவர்கள் நல்ல பணம் சம்பாதிக்கலாம். வீட்டுக்கு குறைந்தது நாலு பசுவளரும் வன்னியிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கால்நடை வளர்ப்புப் பாதிப்புறாமல் தடுத்து உதவ முடியும் தமது எதிர்காலச் சந்ததியினரின் போசாக்கின்மையைப் போக்குவதற்கு ஓரளவேனும் உதவலாம்.

# தமிழ் மாவட்டங்களிலும் விவசாய புனரமைப்பு கடன்

## அரச, தனியார் வங்கிகள் மூலம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 17

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு என விவசாயப் புனரமைப்புக் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரிலேயே இத் திட்டம் அமுல் நடத்தப்பட உள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார். புத்தளம், அம்பாறை, முல்லைத்தீவு, பொலனறுவை, அம்பாந்தோட்டை, மொனறாகலை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கே இக் கடன்கள் வழங்கப்படும்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கி ஆகியவற்றினூடாக இக் கடன்கள் வழங்கப்படும். இவ் வங்கிகள் மேலே குறிப்பிட்ட 13 மாவட்டங்களிலும் உள்ள தமது 185 கிளைகளூடாக இக் கடன் திட்டத்தைச் செயற்படுத்தும்.

பின்வரும் தொழில் முயற்சிகளுக்கு கடன்கள் வழங்கப் படும்.

★ பயிர்ச்செய்கை — குறுகிய கால பயிர்ச்செய்கைகள், வாழை, கரும்பு, மர முந்திரிகை, தோட்டப்பயிர்கள், நிரந்தரப் பயிர்கள்.

★ கால்நடை வளர்ப்பு — பசுமாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை, பன்றி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, வேறு கால்நடை வளர்ப்புப் பணிகள்.

★ மீன்பிடி நடவடிக்கைகள் — பைபர்கிளாஸ் மற்றும் மரப்படகுகள் கொள்வனவு, டீசல் என்ஜின்கள் வாங்குதல், வெளியில்பொருத்தும் மோட்டார் வாங்குதல், மீனவ உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் வாங்குதல், தோணிகளை வாங்குதல்.

★ விவசாயப்பண்ணை உபகரணங்கள் — தெளி கருவிகள், இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள், நிலத்தை பண்படுத்தும் கருவிகள் வாங்குதல், இலை கத்தரிக்கும் கருவி, மற்றும் அறுவடை இயந்திரங்கள் வாங்குதல்.

★ விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் — பனம்பொருள் நடவடிக்கைகள், நெல் குற்றும் இயந்திரக் கொள்வனவு, மீன் புகையிடும் தொழில், மரவள்ளி மா உற்பத்தி, தும்புத் தொழில், மரமரிதல். தேனீ வளர்ப்பு மற்றும் வேறு கிராமிய கைத் தொழில் நடவடிக்கைகள். [த-3]

### ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஏப். 17

வலி - வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-45 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்

### தடுத்து வைக்கப்பட்டோருக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவசரமாக தேவைப்படும் உதவிப் பொருள்களை செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் வழங்கவுள்ளனர்.

இம்மாத இறுதியில் மீண்டும் பலாலிக்கு விஜயம் செய்ய இருக்கும் செஞ்சிலுவை அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உடுபுடைவைகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான வேறு பொருள்கள் ஆகியவற்றுடன் உறவினர்களின் கடிதங்களையும் எடுத்துச் செல்லவுள்ளனர். [த-3]

# இந்தியாவின் பொய்ப் பிரசாரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் பூபதி

## அஞ்சலிக் கூட்டத்தில் பரா உரை

திருநெல்வேலி, ஏப். 17

''எமது போராட்டத்தை அடக்கவும், அதை உலக அரங்கில் கொச்சைப்படுத்தி எம்மைப் பயங்கரவாதிகள் என்று காட்டவும், இந்திய அரசு பிரச்சாரம் செய்து வந்த வேளையில், அதனை முறியடித்து தமிழ் மக்கள் எத்தகைய கொடுமையான அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி உயிர் நீத்தவர் தியாகி அன்னை பூபதி''.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட தியாக தீபம் அன்னை பூபதியின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் திரு. பரா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

எம்மை அழிப்பதன் மூலம் எமது குரலை ஒடுக்கித் தான் கொடுப்பதை தமிழ் மக்களை ஏற்கச் செய்யலாம் என்று இலங்கை அரசு எண்ணுகிறது. இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்குமே பாதகமாக அமையும்.

இந்தியா தற்போது கடைப் பிடித்து வரும் கொள்கையினால் எம்மை இலகுவாக அழித்து விடலாம் என்றும் இலங்கை அரசு நினைத்தது ஆனால் நாம் அண்மையில் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் இராணுவத்தினரிடமே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், இராணுவத்தினர் தலைமறைவாக தப்பிச் செல்லும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது என்றார்.

யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு தங்கண்ணா பேசும் போது கூறியதாவது:

இந்திய இராணுவம் இங்கு வந்து புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு பொதுமக்களை அழித்ததும், எமது சொத்துக்களையும், எம் சகோதரிகளின் மானத்தையும் சூறையாடிக் கொண்டிருந்த வேளையில் —

அவர்களின் கொடுமையை எதிர்த்து தென் தமிழீழத்தில் அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்து மரணத்தைப் தழுவிக் கொண்டவர் அன்னை பூபதி என்றார்.

செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜனனி, உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலா, பொன். பூலோகசிங்கம் உட்படப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர் [த-143-ரி]

### காங்கிரஸின் மேதினம் கொட்டகலையில்

கொழும்பு, ஏப். 17

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது மே தினக் கொண்டாட்டங்களை இம்முறை கொட்டகலையில் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [த-எ]

### சிலுவைத் தியானம்

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் வருடம் தோறும் நடைபெறும் சிலுவைத் தியானம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை நடைபெறும்.

உயிர்த்தெழுந்த ஞாயிறு வழிபாட்டினைத் தொடர்ந்து பொங்கல் விழாவும் இடம் பெறும். [த]

# தலைவனாக வர விரும்புபவன் ஊழியனாகப் பணி செய்ய வேண்டும்

## இயேசு காட்டிய வழி இதுவே

இன்று பெரிய வெள்ளிக் கிழமை. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.

வரலாறு கண்ட தனிப் பெரும் மனிதர் இயேசு. இயேசுவின் வரலாற்றிலேயே ஒரு தனிப்பெருமை கொண்டது அவரின் வாழ்வு. பிறக்கும் முன் வாழ்ந்து இறந்த பின்னும் வாழ்பவர் அவர். வரலாறே அவரை மையமாகக் கொண்டு சுழலுகின்றது.

ஈராயிரம் ஆண்டுகளாக, அவருடைய முழக்கம் அவனியில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது! ஈராயிரம் ஆண்டுகளாக, அவருடைய தொண்டர்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றனர்! ஈராயிரம் ஆண்டுகளாக அவர் தொடங்கிவிட்ட செயல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது! ஈராயிரம் ஆண்டுகளாக அவருடைய ஆளுமையைக் கண்டு வையகம் வியந்து கொண்டே இருக்கின்றது! காலம் கடந்தவர் இயேசு!

மனிதனாக உருவெடுத்து வந்த இறைவன் இயேசுவை, தந்தையென்றும் தலைவரென்றும், ஆசிரியரென்றும், சற்குருவென்றும், நண்பரென்றும், ஆண்டவரென்றும், ஆயரென்றும், அரசரென்றும் போற்றுகின்றோம். அதே இயேசு வரலாறு கண்ட தியாகச் செம்மல்.

யூதமக்கள் தங்கள் கடந்த கால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கின்றனர். அதில் தான் எத்துணை ஏற்றத்தாழ்வுகள்! ஒரு காலத்தில் அமைதியின் கொடுமுடியிலே செழுமையின் சிகரத்திலே வாழ்கின்றனர். அடுத்த கணம் அடிமை என்னும் பள்ளத்தாக்கிலே வீழ்கின்றனர்.

இறைவன் காட்டிய வழியை விட்டு மக்கள் விலகிச் செல்லும் போதெல்லாம் அவரின் ஊழியர் வந்து இடித்துரைக்கின்றனர். அவ்வூழியருள் ஒருவராக வருகின்றார் எரேமியாசு. அவருடைய முன்னோடிகளுக்கு நேர்ந்த கதி தான் அவருக்கும்! அவருடைய எதிரிகள் அவரை இருமுறை சிறையிலே அடைக்கின்றனர், அவரைப் பாழும் கிணற்றிலே தள்ளி, இறக்கும்படி விட்டுவிடுகின்றனர் அவருடைய சொந்த ஊரில் அவருடைய நண்பர்களே அவரைக் கொல்லச் சதிசெய்கின்றனர். இத்தனை துன்பங்களுக்கும் அவர் செய்த குற்றம் என்ன?

அவர்களைப் பற்றிய உண்மைகளை, அவர்களே கேட்க விரும்பாத உண்மைகளை. அவர்கள் மூடிமறைக்க முயற்சிசெய்த உண்மைகளை ஓயாது எடுத்துக் கூறிக் கொண்டிருந்ததுதான் அவர் செய்த மாபெரும் குற்றம்! காலவெள்ளம் உருண்டோடுகின்றது. எதிரிகள் யெருசலேம் பெருநகரை முற்றுகையிட்டுக் கைப்பெற்றுகின்றனர். அதன் பெருமைக்குரிய சின்னங்களை எல்லாம் அழித்தொழிக்கின்றனர் எதிர்த்தவர் வெட்டுண்டு வீழ்கின்றனர், பெண்களும், குழந்தைகளும் அடிமைகளாகக் கடத்திச் செல்லபடுகின்றனர்.

அழிவு சூழ்ந்து வந்த போது அறிவு பெறுகின்[illegible] யாசு கூறியவை [illegible] உண்மைதான். அவரை இவ்வளவு காலமாகப் புறக்கணித்து விட்டோமே. அவருக்கு எத்துணை கடமைப் பட்டுள்ளோம். ஆனால் அவரை எத்துணை துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டோம்! காலம் கடந்த உணர்வு! ஆண்டவர் பெயரால் வருபவர்களுக்கெல்லாம் இதே கதி தானோ? மக்களுக்கு தொண்டாற்றப் புறப்படுவோரெல்லாம் இத்தகைய துன்பத்தை எதிர்நோக்கித்தான் ஆக வேண்டுமோ? வரவிருக்கும் அந்த 'ஆண்டவரின் ஊழியரும்' இந்த துன்பங்களின் வழியில்தான் அவர்களை மீட்க இயலுமோ?

### தலைமை என்பது ஊழியமே

உலகை மீட்க வந்த ஊழியர் தாமே என நிறுவுகின்றார் இயேசு தம் சொல்லாலும் செயலாலும் அதை உறுதிப்படுத்துகின்றார். தலைமை என்ற சொல்லுக்கே புதியதொரு பொருள் கூறுகின்றார் தலைமை என்பது ஊழியம். தலைமை என்ற கோபுரம் தொண்டு என்ற அடிக்கல்லால் எழுப்பப்பெற வேண்டும். தலைவனாக இருக்க விரும்புகிறவன் ஊழியனாகப் பணியாற்றவேண்டும். ஒருவன் தொண்டனாக இருந்தால் தலைவனாகத் திகழ்வான்.

இயேசுவின் இறுதி உணவு வேளை. சீடர்களின் உள்ளங்களிலே இனம் தெரியாத [illegible] தங்கள் தலைவரைப் பிரியப் போகின்றாரோ என்ற எண்ணம் அவர்களை வாட்டுகின்றது 'ஆண்டவர் என்றும் குருவென்றும் போற்றிப் போற்றிப் பெருமைப்பட்டோமே... அவர் நம்மை விட்டுப் போய்விட்டால்......' அவர்களுடைய நெஞ்சம் விம்முகின்றது.

தம்முடைய வையக வாழ்வின் இறுதி நாள் நெருங்கி விட்டதை உணருகின்றார் இயேசு. அவர்களை விட்டுப் பிரியுமுன், தம்முடைய உயரிய பண்பை, தாம் ஓர் ஊழியர் என்ற உண்மையை அவர்கள் இதயத்தில் ஆழமாகப் பதியவைக்கவிரும்புகின்றார். அகத்தின் அமைதி முகத்திலே ஒளிவீச, எழுகின்றார். உள்ளத்தால் மட்டுமன்றி, உருவத்திலும் செயலிலும் ஊழியனாகவே மாறிவிடுகின்றார். தம் உடைகளைக் களைந்து விட்டு, இடையிலே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு. அகன்ற ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஏந்திக்கொண்டு வருகின்றார். தம்மைத் தலைவராக ஏற்றுக் கொண்டதும் தம் சீடர்முன் குனிந்து, அவர் தம் காலடிகளைத் தொட்டுக் கழுவி துடைக்கின்றார்.

தெய்வத் திருமகன் இயேசு, தலைவருள் பெருந்தலைவர், நம் ஊழியர் என்ற எண்ணம் நம்மைத் திடுக்கிடச் செய்கின்றது இந்த ஊழியர் வெறும் பணியாளர் மட்டுமல்லர் அப்பணியிலே தம் உயிரையும் தியாகம் செய்யும் உத்தமர். 'நானே நல்ல ஊழியன்' எனக் கூறாமற் கூறும் பண்புடைய பெருமான் பண்பிலே தெய்வமாய் செயலிலே தியாகியாய் வந்த செம்மல்.

வண. பிதா. பி எம். இம்மானுவேல

# வரட்சி நீடிக்குமானால் பெரும் பஞ்ச நிலை வரும்

## அரசாங்கம் எச்சரிக்கிறது

கொழும்பு, ஏப். 17

எதிர்வரும் மே மாதம் வரை மழை பெய்யாவிடில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் உண்மையான பஞ்சத்துக்கு ஆளாவார்கள்.

இப்படி அரசு எச்சரித்துள்ளது.

இந்த அபாய நிலைமை பற்றி அரசாங்கம் இலங்கைக்கு உதவி வழங்கி வரும் நாடுகளின் தூதர்களுக்கு விவரித்துள்ளது

மக்கள் பட்டினிக்கு ஆளாவதைத் தவிர்க்க, தாராளமாக நிவாரண உதவிகளை வழங்கும்படி அந்த நாடுகளை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவதற்காக 26 ஆயிரத்து 600 மெட்ரிக் தொன் அரிசியும், 3 ஆயிரத்து 240 மெட்ரிக் தொன் தானிய வகைகளும் தேவைப்படுவதாக சமூக சேவைகள் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. [இ-எ]

### பூபதியின் நினைவு நாளும் உண்ணாவிரதமும்

யாழ்ப்பாணம், ஏப். 17

வலிகாமம் தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள அன்னை பூபதியின் நினைவு நாளும், அடையாள உண்ணாவிரதமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் திரு இளம்பரிதி, திரு. பரா ஆகியோரின் உரையும் வில்லிசை மற்றும் நாடகம் ஆகியவையும் இடம்பெறும். [த]

# கிளிநொச்சிப் பகுதியில் கோழிகளுக்கு தடுப்பூசி

''ரெனிக்கட்'' நோய் பரவுவதைத் தடுக்குமுகமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கோழிகளுக்கு தடுப்பூசி போடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திருநகர், கணேசபுரம், வட்டக்கச்சி, திருவையாறு, பெரியகுளம், இராமநாதபுரம். அம்பாள் நகர் ஆகிய பகுதிகளில் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்து அறுநூறு கோழிகளுக்கும், நானூறு கோழிக் குஞ்சுகளுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. [த]

# இந்திய வம்சாவளி தமிழரை பாதுகாக்க வேண்டும்

## ராவுக்கு தொண்டா கடிதம்

இலங்கையில் இருந்து திரும்பி தமிழகத்தில் பல ஆண்டுகளாக வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் விசேட அந்தஸ்தில் வைத்து பாதுகாத்துக் கவனிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் தொண்டமான், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைக் கேட்டுள்ளார்.

பிரதமர் ராவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

கடிதத்தின் பிரதி ஒன்றை அமைச்சர் தொண்டமான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழகத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் மீது கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டாம் என்றும் திரு. தொண்டமான் கேட்டுள்ளார். [த-எ]

# பணப்புழக்கத்தைச் சீராக்க நடவடிக்கை எடுக்கவும்

## செயலகக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் பணப் புழக்கத்தைச் சீராக்க உடன் பணம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்புக்கு அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பணப் புழக்கத்தை சீராக்க வங்கி அதிகாரிகளும், அரச அதிபரும் கூட்டாக நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. [த-3]

# தடுப்புக் காவல் கைதிகளுக்கு அலவன்ஸ் தொகை அதிகரிப்பு

தடுப்புக் காவல் கைதிகளுக்கு வழங்கும் தினசரி அலவன்ஸ் பணம் ஆளுக்கு 29 ரூபாவாக அதிகரிக்கப்பட உள்ளது.

இப்போது தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு 21 ரூபா 50 சதமே வழங்கப்படுகின்றது.

இந்தத் தொகையை அதிகரிக்கும்படி மனித உரிமைகள் பணியகம் அரசுக்குச் சிபார்சு செய்துள்ளது.

இச் சிபார்சை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் விரைவில் அதிகரிப்பு அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த-எ]

## மனித உரிமைகள் குழுவினர்

# பொலீஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயம் செய்வர்

கொழும்பு, ஏப். 17

மனித உரிமைகள் பணியக உறுப்பினர்கள். நாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்

தமிழ்-சிங்களப் புத்தாண்டு தினத்திற்குப் பின்னர் இத் திடீர் விஜயங்களைத் தாம் மேற்கொள்ள இருப்பதாக மனித உரிமைகள் பணியகத் தலைவர் திரு. ஜே. எப். ஏ. சூசா தெரிவித்தார்.

ஆறு தடுப்புக் காவல் முகாம்கள் மற்றும் பத்து புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களைத் தவிர்த்து பொலீஸ் நிலையங்களிலும் சில தடுப்புக் காவல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே இத் திடீர் விஜயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு சூசா சொன்னார். [த-எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ★ நொதேண் கல்வி நிலையம் ★

சுண்டிக்குளி.

| A/L 94 வகுப்புகள் | O/L 92 Day Class |
|---|---|
| ஆரம்பம்: 18—04—1992 சனி காலை 8-00 | ஆரம்பம்: 18—04—1992 சனி காலை 8-00 |

[20499]

## முக்கிய அறிவித்தல்

### லொறி, உழவு இயந்திர உரிமையாளர்கள்

வடபகுதிக்கு வெளியே செல்லும் வாகனங்களுக்கு வழியில் ஏற்படும் போக்குவரத்துச் சம்பந்தமான நடைமுறை பிரச்சினைகள் குறித்து 20-04-1992 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறும். இதில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவிருப்பதால் லொறிகள், நாலு சக்கர உழவு இயந்திரம், இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஆகியவற்றின் உரிமையாளர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

வடபிராந்திய பொதி சுமக்கும்-
வாகன சங்கம்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[20490]

## NEW SCIENCE HALL & NEW SCIENCE ACADEMY

JAFFNA.

94 A/L
புதிய பிரிவு
ஆரம்பம்: 18-04-1992
சனி காலை 7-00 மணி

[சி/1880]

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 94

கலை, வர்த்தகம் வகுப்புகள்

ஆரம்பம்: 18-04-92
சனி 3 மணி (மாலை)

| | |
|---|---|
| பொருளியல் | — உதயன் |
| வர்த். நிதியும் | — தேவா |
| கணக்கியல் | — ராஜன் |
| அளவையியல் | — எஸ். எஸ். மனோகரன் |
| தமிழ் / இந்து நாகரிகம் | — பாலா |
| புவியியல் | — இக்னேசியஸ் |
| அரசியல் | — கியூபேட் |

A/L 94 விஞ்ஞான வகுப்புகள்
19-04-92 இல் ஆரம்பமாகின்றன.

[சி-1921]

சுன்னாகம்

## கதிரமலைச் சிவன் தேவஸ்தான

### ★ வருடாந்த மகோற்சவம் ★

**கொடியேற்றம்** —
ஆங்கிரச சித்திரை 11 ஆம் நாள் வியாழக்கிழமை [23 - 04 - 1992]

**கைலாசவாகனம்** —
சித்திரை 13 [25 - 04 - 1992]

**லிங்கோற்பவம்** —
சித்திரை 16 [28 - 04 - 1992]

**வேட்டைத் திருவிழா** —
சித்திரை 18 [30 - 04 - 1992]

**தேர்த்திருவிழா** —
சித்திரை 19 [01 - 05 - 1992]

**சங்காபிசேகம் - பூங்காவனம்** —
சித்திரை 22 [04 - 05 - 1992]

மகோற்சவ நாட்களில் காலைத் திருவிழா 6 மணிக்கு ஆரம்பமாகி 10-30 மணிக்கு நிறைவுறும்.

மாலைத் திருவிழா 4 மணிக்கு ஆரம்பமாகி 7-30 மணிக்கு நிறைவுறும்

நாளாந்தம் இரவு 7-30 மணி முதல் 8-30 மணி வரை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் சமயச்சொற்பொழிவு சிறப்பு நிகழ்ச்சியாக அமையும்.

சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்,
தேவஸ்தான பிரதம குரு.

சுன்னாகம்

---

வெல்லுங்கள்!
தங்கப் பதக்கங்கள்!!
பரிசில்கள்!!!

## உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும்

# ★ மாபெரும் கட்டுரைப் போட்டி ★

மாணவர்களே! தமிழ் ஆர்வலர்களே!

உங்கள் பரந்த அறிவைப் பெருக்கவும்
உங்கள் திறமை வெளிப்படவும்
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

**போட்டி அமைப்பு:**

★ பாடசாலை மாணவர்களுக்கான போட்டி இரு பிரிவுகளாக, இரண்டு நிலைகளில் நடத்தப்படும்.

★ சகலரும் பங்குபற்றும் மற்றொரு பொதுப் போட்டி.

ஒவ்வொரு பிரிவிலும்,

முதலாம் பரிசு: தங்கப் பதக்கம்
இரண்டாம் பரிசு: ரூ. 1,000-00
மூன்றாம் பரிசு: ரூ. 500-00

மற்றும் ஆறுதல் பரிசுகள்

கொத்தணி மட்டத்தில் முதலாம் இடம் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

பரிசு பெறுவோர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

### (1) பாடசாலை மாணவர்களுக்கான போட்டி விதிகள்:

அ. 9ஆம், 10ஆம், 11ஆம், ஆண்டு மாணவருக்கு ஒரு பிரிவாகவும், 12ஆம், 13ஆம் ஆண்டு மாணவருக்கு மற்றொரு பிரிவாகவும் போட்டி நடத்தப்படும்.

முதலாவது நிலை

ஆ. கோட்டக் கல்வி அதிகாரிகளால் கொத்தணி மட்டத்தில் பூர்வாங்கத் தேர்வு நடத்தப்படும்.

இ. ஒவ்வொரு கொத்தணியிலும் இரு பிரிவுகளிலும் தனித்தனியாக மூன்று மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டாவது நிலை

ஈ. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தினத்தில் இறுதிப் பரீட்சை நடத்தப்படும். இப் பரீட்சைக்கு மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டும்.

உ. பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்/விரிவுரையாளர் கட்டுரைகளை மதிப்பீடு செய்து பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பர். அவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### (2) பொதுப்போட்டி

கீழ்க்காணும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.

**தலைப்புகள்:**

1. தமிழர் பிரதேச மூலவளங்கள்
2. ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள்
3. இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதை
4. பொருத்தமான தொழில் நுட்பம்
5. நெருக்கடி நிலையும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும்

**போட்டி விதிகள்:**

(i) கட்டுரை 800 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
(ii) ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம்.
(iii) கட்டுரையில் எழுதுபவரின் பெயர், முகவரி எழுதப்படல் ஆகாது.
(iv) உதயனில் பிரசுரமாகும் கூப்பனை நிரப்பி கட்டுரையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
(v) கடித உறையின் இடது மேல் மூலையில் ''கட்டுரைப் போட்டி'' எனத் தவறாது குறிப்பிடவும்.
(vi) கட்டுரைகள் 15-05-1992 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.
(vii) கட்டுரைகளை மூடிய கடித உறையில் உதயன் காரியாலயத்தில் நேரிலும் ஒப்படைக்கலாம். தபாலில் அனுப்புவோர், ஆசிரியர், உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
(viii) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கும் உரிமை உதயனுக்கே உரியது. கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா
(ix) யாழ். பல்கலைக்கழக நடுவர் குழு பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

குறிப்பு:- போட்டிகள் தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

### உதயன் கட்டுரைப் போட்டி - 1992

கட்டுரைத் தலைப்பு: ..............................

முழுப் பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

இக் கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
கையொப்பம்

திகதி: ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## கலைஞருக்கு விருது வழங்கும் வைபவம்

'சந்தனக்காடு' நாடகக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி அரங்கில் நடைபெறுகிறது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

சந்தனக்காடு' நாடகக் கலைஞர்களுக்கான விருதுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி, விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவு சிறப்புத் தளபதி செல்வி ஜெயந்தி ஆகியோர் வழங்குவார்கள். [இ]

## இன்று

உரும்பராய் ஞான வைரவசுவாமி கோவில் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு ''கம்பன் காட்டும் தலைவன்'' என்ற பொருளில் கம்பன் கழகம் இ ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். [த]

★ ★ ★

தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று, இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புக்கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டினை நினைவு கூருமுகமாக இடம்பெற்று வரும் உண்ணா விரதமும் நினைவுக் கருத்தரங்கும் இன்று வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் நடைபெறும். [த]

## ஈஸ்டர் பஜனை

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் 3 - 30 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஈஸ்டர் பஜனை நடைபெற உள்ளது.

## விளையாட்டு வினையானது

சிறுவர் ஒருவன் விளையாட்டுக்காக நூலை கோடரியால் வெட்டிய போது, அது இலக்குத் தவறி அருகில் நின்ற தங்கையின் கை விரலைத் துண்டாடியது.

சுன்னாகம் சூறாவத்தைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பாலசிங்கம் பாலகௌரி (வயது 8) என்ற சிறுமியே விரல் துண்டிக்கப்பட்டவராவர். [த-15]

## 2 மாதகால ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி விக்கிரம் - 3, பச்சைசக் குடா, ரேசர், அந்தேகர் ஆகியவையே இவை ஆகும்.

மணலாறு, வவுனியா, திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றில் மணலாறில் மேற்கொள்ளப்பட்ட 'கயே பகர' நடவடிக்கையின்போது இராணுவத்தினரிடமிருந்து பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றைப் புலிகள் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது

## கொழும்பில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த ரக வாகனங்களைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கும் படியும், அவை எங்காவது தனித்துக் காணப்பட்டால் உடனே அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அல்லது இராணுவ முகாமுக்குத் தகவல் தெரிவிக்குமாறும் பாதுகாப்பு வட்டாரங்கள் மக்களைக் கேட்டுள்ளன.

அம்பாறை, மஹரகம குண்டு வெடிப்புக்களில் மொத்தம் 48 பேர் இறந்தனர். சுமார் 50 பேர் காயமுற்றனர்.

மஹரகம குண்டு வெடிப்புக்கு ஜே. வி. பியின்ரே பின்னணியில இருந்ததாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் முதலில் சந்தேகம் கொண்டன. 'ஸ்ரீ. ல. சு. க. ஆதரவாளர்களின் வேலை என்று பின்னர் தெரிவித்தன. விடுதலைப் புலிகளும் இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்றும் ஒரு கட்டத்தில் சந்தேகம் தெரிவித்திருந்தன. (அ-10)

---

## கோகுலம்

### கால் நடை உணவு உற்பத்தி நிலையம்

கால் நடை உணவு தயாரிப்பில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு எமது நிலையத்தில் வெற்றிடம் உண்டு. தகுதியானவர்களுக்கு நல்ல ஊதியமும் வேறு சலுகைகளும் வழங்கப்படும். சுய விவரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
கோகுலம்,
182, 1/5, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[20602]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

கணக்கியல் S. K. பிரபாகரன்

ஆரம்பம்: 19 - 04 - 1992
சனி, ஞாயிறு 2 மணி

92 வினா - விடை வகுப்பு 2 - 3
93 புதிய பிரிவு 3 - 4
94 புதிய பிரிவு 4 - 5

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி-1881]

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

விரஜனனம்:
10-03-1966

★



வீரமரணம்:
19-09-1991

### வீரவேங்கை கார்த்திகா
(நடராஜா வசந்தா)

அன்னியன் எம்மை ஆள்வதா என்று பொங்கிய தலைவன் தானையில் சேர்ந்தீர்! இந்தியன் என்ன? எம்மவன் என்ன? அத்தனை பேரும் துச்சமே என்று மண்ணினை மீட்க மண்ணிலே வீழ்ந்து விதையாகப் போனீர். மாவீரரானீர்.

17-4-1992 அன்று வீரவேங்கை கார்த்திகாவின் வீட்டுக்கிருத்தியம் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்களை இவ்வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
திருமதி ராசமணி நடராசாவும்,
குடும்பத்தினரும்.

ஐந்து சந்தி,
சோனக தெரு,
யாழ்ப்பாணம்.

(20606)

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணமுத்து தங்கரத்தினம்

திருமதி சரவணமுத்து தங்கரத்தினம் அவர்கள் நேற்று [16-04-92] காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து [ஓய்வு பெற்ற தபாலதிபர்] அவர்களின் அன்பு மனைவியும், பொன்னம்பலம் [உதவிக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடம்], சர்வேந்திரம் [கணக்காளர், U.S.A.] சரோஜாதேவி [U. K.] ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் திருமதி குணபூபதி பொன்னம்பலம், திருமதி பூங்கோதை சர்வேந்திரம் (U. S A.) ஆனந்தகுமாரசாமி [கணக்காளர், U. K] ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி, ஆரணி, சரவணா, சங்கரா, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17-4-1992 பிற்பகல் 2 00 மணி அளவில் மல்லாகம் 'மணிமனை' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. பொன்னம்பலம்

மணிமனை,
மல்லாகம்.

[20610]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.